**ஜூலை – 11**

# தேசியச் செய்திகள்

## இந்தியா-ரஷ்யா மூலோபாய பொருளாதார உரையாடல்

- இரண்டாவது இந்திய-ரஷ்யா மூலோபாய பொருளாதார உரையாடல் ஆனது புதுடெல்லியில் நடத்தப் பட்டது.
- நிதி ஆயோக்கின் துணைத் தலைவரான ராஜீவ் குமாரால் இந்தியா பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது.
- இந்த உரையாடல் அமைப்பானது நிதி ஆயோக் மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பின் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறுவப்பட்டது.
    - இது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 05 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற வருடாந்திர இந்திய-ரஷ்யா இருதரப்பு மாநாட்டின் 19-வது பதிப்பின் போது தொடங்கப்பட்டது.
- இதன் முதல் கலந்துரையாடல் கூடுகையானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 25-26 ஆகிய தேதிகளில் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் நடைபெற்றது.

## துறைமுக ஒருங்கிணைப்புப் பிரச்சாரம்

- கடல்சார் ஊழல் தடுப்பு அமைப்பானது இந்தியாவில் துறைமுக ஒருங்கிணைப்புப் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
- இந்திய துறைமுகங்களில் செயல்பாடுகளின் போது வர்த்தகம் செய்வதில் ஏற்படும் ஒருங்கிணைப்புப் பிரச்சினைகள் மற்றும் தடைகளை (நீண்டகால அளவில்) அகற்றுவதே இதன் நோக்கமாகும்.
- கடல்சார் ஊழல் தடுப்பு அமைப்பானது கடல்சார் தொழில்களில் ஊழலை எதிர்கொள்வதற்காக 110-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இணைந்து பணிபுரியும் உலகளாவிய வணிக அமைப்பாகும்.
- கப்பல்துறை அமைச்சகம் இதற்கு பொறுப்புடையதாகும்.

## அமைச்சரவையின் முக்கிய முடிவுகள்

### *சீட்டு மோசடி*

- முறைப்படுத்தப்படாத வைப்புகள் திட்ட மசோதா 2019-க்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நாட்டில் சட்டவிரோத வைப்பு நடவடிக்கை அச்சுறுத்தல்களை சமாளிக்க இந்த மசோதா உதவும்.

### *மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் விவகாரங்கள்*

- மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் விவகாரங்கள் திருத்த மசோதா 2019 -க்கு மத்திய

அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்த மசோதாவானது 1956 ஆம் ஆண்டின் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் விவகாரங்கள் சட்டத்தை திருத்தம் செய்ய முயல்கிறது.
- இந்த மசோதாவானது தீர்ப்பளிப்பதற்கான காலக்கெடுவை தீவிரமாக்குவதற்காக வெவ்வேறு அமர்வுகளைக் கொண்ட ஒரே தீர்ப்பாயத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *கிராமப்புற சாலைகள்*

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனாவின் (BMGSY) மூன்றாவது கட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் கீழ் கிராமப்புறங்களில் 1.25 லட்சம் கி.மீ. சாலைகளில் மேம்படுத்தப்படும்.

### *ரயில்வே பாதுகாப்புப் படை*

- மத்திய அமைச்சரவையானது ரயில்வே பாதுகாப்புப் படையினருக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குரூப் – A அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- இந்த மாதத் தொடக்கத்தில் மத்திய சேமக் காவல்படை, எல்லை பாதுகாப்புப் படை, மத்திய தொழிலக பாதுகாப்புப் படை, இந்தோ-திபெத் எல்லைக் காவல்படை மற்றும் சாஸ்திர சீமா பால் ஆகியவற்றிற்கும் இதே சலுகை வழங்கப்பட்டன.

### *சிறார் வன்கொடுமை மரண தண்டனை*

- குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்துப் பாதுகாக்கும் சட்டம் 2012-ஐ திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டணையை வழங்குகிறது.

### *திருநங்கைகளுக்கு ஆதரவு*

- திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) மசோதா 2019-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- திருநங்கைகளுக்கு சமூக, பொருளாதார மற்றும் கல்வி அதிகாரங்களை அளிக்க இந்த மசோதா முயல்கிறது.
- இந்த மசோதாவை மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அனுப்புதலானது தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் முதல் 100 நாட்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ளது.

### *தொழில் ரீதியான பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைகள் மசோதா - 2019*

- தொழில் ரீதியான பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணிநிலைகள் மசோதாவிற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது தொழில் ரீதியான பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணிநிலைகள் மீதான 13 தொழிலாளர் சட்டங்களை ஒரே சட்டமாக இணைக்க முயல்கிறது.
- இது 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

### ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டம் - மியான்மர்

- ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரெக்ஹைன் மாநிலத்திற்காகக் கட்டப்பட்ட 200 வீடுகளை மியான்மரிடம் இந்தியா ஒப்படைக்கவுள்ளது.
- 2017-ன் பிற்பகுதியில் மியான்மரின் ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டத்தில் இந்தியா கையொப்பமிட்டது.



- இந்தத் திட்டமானது இடம்பெயர்ந்தோருக்கான வீட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரெக்ஹைன் மாநிலத்தில் உள்ள மியான்மர் அரசிற்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டது.
- ஆகஸ்ட் 2017 முதல் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மையின ரோஹிங்கியா இஸ்லாமியர்கள் மியான்மரின் ரெக்ஹைன் மாநிலத்திலிருந்து அண்டை நாடான வங்காள தேசத்திற்குத் தப்பிச் சென்று மாபெரும் அகதிகள் நெருக்கடியைத் உருவாக்கினர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### ஓவிய கலைஞர் ஐ-டா

- ஐ-டா என்பது உலகின் முதலாவது மிகவும் யதார்த்தமான மனிதனைப் போன்று தோற்றமளிக்கும் ரோபோ ஓவியர் ஆகும்.
- இது ஐடன் மெல்லர் என்பவரின் சிந்தனையால் உருவானதாகும்.



- இது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- ஆங்கிலக் கணிதவியலாளரும் எழுத்தாளரும் உலகின் முதல் கணிணிக் குறியீட்டாளர் என அடிக்கடிக் குறிப்பிடப்படுபவருமான அடா லவ்லேஸின் பெயரையடுத்து இதற்கு ஐ-டா என பெயரிடப்பட்டது.
- இது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய கடல் மட்டம் உயர்வு

- புவி அறிவியல் அமைச்சகத்தால் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட தரவுகளின்படி டைமண்ட் துறைமுகமானது அதிகபட்ச கடல் மட்ட உயர்வைப் பதிவு செய்துள்ளது.
- மேற்கு வங்காளத்தில் ஹூக்ளி ஆற்று முகத்துவாரத்தில் டைமண்ட் துறைமுகம் அமைந்துள்ளது.
- மேற்கு வங்காளத்தில் கடல் மட்ட உயர்வு அதிகமாக உள்ளது. இது குறிப்பாக சுந்தரவன கழிமுகத் துவாரப் பகுதிகளில் நன்னீர் மற்றும் உப்புநீர் ஆகியவை கலந்ததின் விளைவாக டெல்டா வண்டல் படிவுகளினால் ஏற்பட்டதாகும்.
- கடந்த 40-50 ஆண்டுகளில் நாட்டின் கடல் நீர்மட்ட உயர்வானது இந்தியக் கடற்கரைகளில் ஆண்டுக்கு 1.3 மி.மீ என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆனால் இந்த டைமண்ட் துறைமுகத்தின் நீர்மட்ட உயர்வானது ஏறக்குறைய 5 மடங்கு அதிகமாக ஆண்டுக்கு 5.16 மி.மீ. ஆக உள்ளது.
- குஜராத்தில் உள்ள காண்ட்லா, மேற்கு வங்காளத்தின் ஹால்தியா மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளின் போர்ட்பிளேர் ஆகிய துறைமுகங்களும் இந்த கடல் மட்ட உயர்வைப் பதிவு செய்துள்ளன.
- இந்தியப் பிராந்தியத்தின் மீதான ஆய்வுகளானது அகில இந்திய சராசரி அடிப்படையில் 0.6°C அளவில் வெப்பமயமாகும் போக்கைக் காட்டுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## மேரி பிசல் மேரா பியோரா தளம்

- ஹரியானா அரசானது "மேரி பிசல் மேரா பியோரா தளம்" எனும் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் மூலம் பயிர் தொடர்பான விவரங்களைப் பதிவேற்றிய பின்னர் அரசின் பல திட்டங்களின் நன்மைகளை விவசாயிகள் நேரடியாகப் பெறலாம்.
- இந்தத் தளமானது விவசாய சாதனங்களுக்கான மானியங்களை எளிதில் பெற விவசாயிகளுக்கு உதவும்.

# விளையாட்டுச் செய்திகள்

## G. கோசனோவ் நினைவு சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்

- G. கோசனோவ் நினைவு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளானது கஜகஸ்தானின் அலமாட்டியில் நடைபெற்றது.
- பதக்கப் பட்டியல்

| | |
|---|---|
| **தங்கப் பதக்கம்** | |
| 800 மீட்டர் – ஆடவர் | முகமது அப்சல் |
| வட்டு எறிதல் – ஆடவர் | கங்கதீப் சிங் |
| வட்டு எறிதல் – மகளிர் | நவ்ஜித் கவுர் |
| மும்முறை தாண்டுதல் | முகமது சலாலுதின் |
| நீளம் தாண்டுதல் | M. ஸ்ரீசங்கர் |
| ஈட்டி எறிதல் | சஹில் சில்வால் |
| **வெள்ளிப் பதக்கம்** | |
| வட்டு எறிதல் – ஆடவர் | S. மித்ரா வருண் |
| வட்டு எறிதல் – மகளிர் | ஜியோதி |
| மும்முறை தாண்டுதல் | முகமது ஜீபர் |
| ஈட்டி எறிதல் | ரோஹித் யாதவ் |
| **வெண்கலப் பதக்கம்** | |
| சம்மட்டி எறிதல் | அனிதா |

## டூட்டி சந்த் – தங்கப் பதக்கம்

- உலகளாவியப் போட்டியில் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தடகள வீரரான டூட்டி சந்த் பெற்றுள்ளார்.
- இவர் இத்தாலியின் நபோலியில் நடைபெற்ற உலக யுனிவர்சியேட் போட்டித் தொடரில் முதலிடத்தைப் பிடித்தார்.

- இவர் 11.32 வினாடிகளில் முடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.




- இவரின் தேசிய சாதனையானது 11.24 வினாடிகளாகும்.
- டூட்டி சந்த் ஒடிசாவைச் சேர்ந்தவராவார்.
- ஹீமா தாஸிற்குப் பிறகு உலகளாவியப் போட்டியில் தங்கம் வென்ற இரண்டாவது இந்திய தடகள வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டில் உலக இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 400 மீ பந்தயத்தில் ஹீமா தாஸ் தங்கம் வென்றார்.

# முக்கிய தினங்கள்

## உலக மக்கள் தொகை தினம் – ஜூலை 11

- உலக மக்கள் தொகை தினமானது ஜூலை 11 அன்று கடைபிடிக்கப் படுகின்றது.




- இது மக்கள் தொகையின் பிரச்சினைகளின் முக்கியத்துவம் மற்றும் அவசர நிலை குறித்து கவனம் செலுத்த முற்படுகின்றது.
- இது 1989 ஆம் ஆண்டில் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டத்தின் அப்போதைய ஆளுமைக்

குழுவால் நிறுவப்பட்டது.

- இந்த நாளானது முதன்முதலில் 1990 ஆம் ஆண்டு ஜூலை 11 அன்று கடைபிடிக்கப்பட்டது.
- இவ்வருடம் கருத்துருக்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.
  - 1994 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் மேம்பாடு மீதான சர்வதேச மாநாட்டின் குறிக்கோள்களில் எட்டப்படாத தீர்மானங்களின் மீது உலகளாவிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அழைப்பை விடுத்துள்ளது.

- - - - - - - - - - - - - - -